## 3.23 1989-90க்கு முன் கட்டித் தரப்பட்டு இப்போது பழுதடைந்து குடியிருக்க தகுதியில்லாத வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகள் கட்டித் தருதல் மற்றும் பழுது நீக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதி.ந.5) துறை

அரசாணை (நிலை) எண். 45 நாள் : 11.03.97

படிக்க:

1. அரசாணை நிலை எண்.48, ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள். 22.03.95
2. அரசாணை நிலை எண்.5, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்.09.01.96
3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, இயக்குநரின் நே.மு,க. எண்.எச்.1/14666/96, நாள்.24.06.96
4. ஊரக வளர்ச்சித்துறை இயக்குநரின் கடித எண். 62491/95, திட்டம் –1, நாள்.22.08.96

**ஆணை**

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் மற்றும் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு கட்டிக்கொடுக்கப்பட்டு பழுதடைந்த வீடுகளை மேம்படுத்தவும், சீர்படுத்தவும் ஒரு வீட்டிற்கு ரூ.5,000/– வீதம் 30,000/– வீடுகளுக்கு 1995–96–ல் ரூ.15 கோடி செலவினம் செய்ய பார்வையில் படிக்கப்பட்ட அரசாணைகளில் ஆணைகள் வெளியிடப்பட்டது. இப்பணி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக ஊரக வளர்ச்சி இயக்குநரின் மேற்பார்வையில் செயல்படுத்தவும் ஆணையிடப்பட்டது. இத்திட்டத்தினை செயல்படுத்துவது தொடர்பான விரிவான வழிமுறைகளை வகுக்குமாறும் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார். ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் மேலே பார்வை நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் முற்றிலும் பழுதடைந்த குடியிருக்கத் தகுதியில்லாத வீடுகளை பழுதுநீக்கம் செய்வதற்குப் பதிலாக புதிய வீடுகளை கட்டித் தந்திட திருத்திய ஆணைகள் வெளியிடுமாறு கேட்டுக்கொண்டார். இதனால் இத்திட்டம் இதுவரை செயல்படுத்தப்படாமல் 1995–96–ல் வழங்கப்பட்ட ரூ.15 கோடி தற்பொழுது ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரின் பொறுப்பில் உள்ளது. 1996–97–ம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக மேலும் ரூ.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரின் கருத்தினை அரசு ஆழ்ந்து ஆய்வு செய்து பின்வருமாறு ஆணையிடுகிறது.

(1) 1995–96–ம் ஆண்டு அனுமதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட ரூ.15 கோடியையும் அரசாணை நிலை எண்.5, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள். 09.01.96–ல் ஆணையிட்டவாறு ஆதிதிராவிடர்களுக்கு கட்டிக்கொடுக்கப்பட்டு பழுதடைந்த தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்யப்பயன்படுத்தப்பட வேண்டும்.

(2) 1996–97–ம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.15 கோடியைத் தொகுப்பு வீடுகள் கட்டப்படுவதற்கு முன்பு (1989–90–க்கு முன்பு) ஆதிதிராவிடர்களுக்காக கட்டப்பட்டுள்ள ஓட்டுவில்லை வீடுகளில் இடிந்து குடியிருக்கத் தகுதியில்லாத வீடுகளுக்கு பதில் புதிய வீடுகளை அதே பயனாளிகளுக்கோ அல்லது தற்போதுள்ள அவர்களது வாரிசு தாரர்களுக்கோ கட்டிக்கொடுக்க செலவினம் செய்ய அரசு, ஊரக வளர்ச்சித் துறை இயக்குநருக்கு அனுமதி அளிக்கிறது.

(3) மேலே பத்தி 2 (2)ல் குறிப்பிடப்பட்டுள்ள இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்.

2225. ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்.01 ஆதிதிராவிடர் நலன் –283. வீட்டு வசதி – எட்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II. மாநிலத் திட்டம் – JS ஊரக ஆதிதிராவிடர்கள் வீடுகளின் தர நிலையை உயர்த்துதல்–09. உதவி மானியங்கள் (த.தொ.கு.2225 01 283 JS 0903)

4. மேலே பத்தி 1–ல் குறிப்பிடப்பட்ட தொகைக்கு வட்டி ஏதேனும் சேர்ந்து இருப்பின் அத்தொகையினையும் சேர்த்து மேலே பத்தி 2 (1)–ல் ஆணையிட்டவாறு ஆதிதிராவிடர்களுக்கு கட்டிக்கொடுக்கப்பட்டு பழுதடைந்த தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்ய செலவினம் செய்ய ஆணையிடப்படுகிறது.

## 3. IAY

**5.** இத்திட்டம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரின் மேற்பார்வையில் செயல்படுத்தப்பட வேண்டும். இத்திட்டம் செயல்ப்டுத்துவதற்கான மாவட்ட வாரியான ஒதுக்கீட்டினை ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர், அரசின் ஊரக வளர்ச்சித் துறைக்கு ஒப்புதலுக்காக அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக செயல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கான விரிவான வழிமுறைகளை ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் தனியாக வெளியிடுவார்.

**6.** அனுமதி அளிக்கப்பட்ட தொகையினை ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் அரசின் ஊரக வளர்ச்சித் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மாவட்ட வாரியான ஒதுக்கீட்டின் அடிப்படையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு அளிக்க வேண்டும்.

**7.** இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.**949**/FS(P) /**97**, நாள்.**11.03.97** ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி**
அரசு செயலாளர்